**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

SC.No.183/2023

நாள் 23.07.2025

( எதிரி ஆஜர்)

அ.த.சா.9 திரு. ஜெகதீஸ்வரன் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (அனுமதியுடன்)</u>

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள CDR Section–லில் இருந்து உச்சிப்புளி காவல் நிலைய இமெயில் விலாசத்திற்கு 8012656742 மற்றும் 9677817386 ஆகிய இரு செல்போன் எண்களுக்கான CDR விவரங்கள் பெறப்பட்டன. அந்த இமெயில் ஐடியில் இருந்து நான் பிரிண்ட் எடுத்து காவல் ஆய்வாளர் வசம் கொடுத்தேன். அவ்வாறு நான் பிரிண்ட் அவுட் எடுத்த **CDR விவரங்கள்**தான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அது **அ.த.சா.ஆ.17** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அதற்காக நான் வழங்கிய **65 (B) சான்றிதழ் அ.த.சா.ஆ.18** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகின்றன. )

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்தபோது நான் உச்சிப்புளி காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தேன். மின்னணு ஆவணங்களை கையாளுவதற்கும், மின்னணு சாதனங்களை இயக்குவதற்கும் நான் முறையாக கல்வி பயிலவில்லை என்றால்

அதற்கான சிறப்பு கல்வி பயிலவில்லை, ஆனால் அதனைப்பற்றிய அறிவுத்திறன் எனக்கு உண்டு. CDR Section–லில் இருந்து மேற்படி ஆவணம் அனுப்பப்பட்டது என்று ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. CDR Section என்பது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ளது. இது போன்ற மின்னணு விஷயங்களை கையாள்வதற்கு Cyber Crime police பிரிவு உள்ளது என்றும், அவர்கள்தான் இவற்றை கையாள்வார்கள் என்றால் சரிதான். அவர்கள் எடுத்து அனுப்பியதைத்தான் பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுத்தேன். அ.த.சா.ஆ.17 அசல் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல, அசல் தான். இமெயிலில் வந்ததை நான் பிரிண்ட் அவுட் எடுத்துக்கொடுத்தேன்.

அ.த.சா.ஆ.17 ஆவணத்தில் எந்த மெயில் ஐடியில் இருந்து அனுப்பப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் அதில் இருக்காது. அ.த.சா.ஆ.17 ல் உள்ள விவரங்களை நான் தயார் செய்யவில்லை. ஆய்வாளர் மேற்படி CDR ரிப்போர்ட்டை கேட்டு வாங்கலாம் என்றால் சரிதான். CDR–ல் இரண்டு தொலைபேசிகளுக்கு இடையில் என்ன பேசப்பட்டது என்ற விவரம் வராது என்றால் சரிதான். CDR Report களை சம்மந்தப்பட்ட Mobile service provider நிறுவனங்களில் Nodal Officers தான் எடுத்துக்கொடுக்க முடியும் என்றால் சரிதான்.

மேற்படி அ.த.சா.ஆ.17 ஆவணம் அந்த கைபேசி எண்களின் Mobile service provider நிறுவனத்தின் Nodal Officer வழங்கியது இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.17 வழக்கிற்காக ஆய்வாளராக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.17 ஆனது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள CDR Section ல் இருந்து உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது என்பதை காட்டுவதற்கான குறிப்பு எதுவும் அதில் இல்லை என்றால் சரிதான். இது உண்மையான ஆவணம் இல்லை என்றும், இந்த ஆவணத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க எனக்கு தகுதி இல்லை என்றும்

சொல்வது சரியல்ல. இந்த வழக்கிற்காக என்னை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.17 ல் நான்தான் பிரிண்ட் எடுத்து கொடுத்தேன் என்ற குறிப்பு எதுவும் அதில் இல்லை என்றால் அ.த.சா.ஆ.18 சான்றிதழ் கொடுத்துள்ளேன். அ.த.சா.ஆ.18 ஆவணம் ஆய்வாளரால் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு என்னிடம் கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெகபூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .